MAY 2022 **U/ID 30624/UCL6A**

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் பத்திற்கு மட்டும்
30 சொற்களில் விடை தருக.

1. நற்றிணையைத் தொகுப்பித்தவர் யார்?

2. செலவழுங்குதல் என்றால் என்ன?

3. பொருள்வயிற்பிரிவோர் எந்நிலையில் செல்வதாக கோப்பெஞ்சோழன் குறிப்பிடுகிறார்?

4. ஏறு தழுவுதல் என்றால் என்ன?

5. குரவைக் கூத்து ஆடுவதன் நோக்கம் யாது?

6. களவு வெளிப்பாட்டில் மனையிலிருக்கும் தலைவியின் நிலையைச் சுட்டுக.

7. விறலியாற்றுப்படை என்றால் என்ன?

8. கையறு நிலை - விளக்கம் தருக.

9. முல்லைத் திணையின் முதற்பொருள் யாது?

10. பரத்தையிற் பிரிவு என்றால் என்ன?

11. அறுபடை வீடுகள் யாவை?

12. மதுரைக் காஞ்சியின் பாட்டுடைத் தலைவன் யார்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் ஐந்திற்கு 200 சொற்களில் விடை தருக.

13. தலைவியை உடன் அழைத்துச் செல்லும் தலைவன் இடைச் சுரத்தில் கூறிய கருத்துக்களை விளக்குக.

14. தலைவனின் பிரிவை ஆற்றாளாய தலைவிக்குத் தோழி கூறிய ஆறுதல் மொழிகள் யாவை?

15. "காமம் சாலா இளமையோன் வயின் ஏமம் சாலா இடும்பை எய்தி" – விளக்குக.

16. அதியமான் நெடுமான் அஞ்சியின் கொடைப் பண்பை விளக்கி வரைக.

17. பாண்டியன் நெடுஞ்செழியனின் ஆட்சிச் சிறப்பு குறித்து விளக்குக.

18. உடன்போக்கு செல்லும் தலைமக்கள் நிலை பற்றி அறிந்தோர் கூற்று யாது?

19. ‘காமம் காழ் கொண்டோர் இன்னின்ன செய்வதுண்டு’ என உலகியல் மேலிட்டுக் கூறுவதாக பேரெயின் முறுவலார் கூறுவன யாவை?

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றிற்கு 500 சொற்களில் விடை தருக.

20. எட்டுத் தொகையில் காணப்படும் அக நூல்களைத் தொகுத்து எழுதுக.

21. ‘அமிழ்து பொதி’ என்று தொடங்கும் குறுந்தொகைப் பாடலின் பொருட்செறிவை விவரிக்க.

22. பரத்தையிற் பிரிவில் மீண்ட தலைவன், தலைவியைக் குறியில் கண்டு கூறியவற்றை விளக்குக.

23. கபிலர் கூறிய வேள்பாரியின் பண்பு நலன்களை எடுத்துரைக்க.

24. பாண்டியன் நெடுஞ்செழியனின் சிறப்புகளை, மதுரைக்காஞ்சி வழி தொகுத்துரைக்க.

———————